## தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டம் - 2015

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2011 பெப்ரவரி 17 ஆந் திகதிய 1 ஆம் பொதிக்கான பீஎல்ஏ201011 ஆம் இலக்க மற்றும் 2 ஆம் பொதிக்கான பீஎல்ஏ201012 ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளின் கீழ் இச் செயற்திட்டம் அமுல்ப்படுத்தப்படுகின்றது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

தென்பகுதி போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள் அமைச்சாகவிருந்த தற்போதைய உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. இலங்கையின் முதலாவது நுழைவு கட்டுப்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைக்கு நுழைவு வீதிகளை இணைப்பதன் மூலம் கைத்தொழில்கள், சுற்றுலாத்துறை, மீன்பிடிகள் மற்றும் விவசாயம் என்பவற்றில் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதன் மூலம் தென் மாகாணத்தின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதே செயற்திட்டத்தின் குறிக்கோளாகும். கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், கொட்டாவ தொடக்கம் கொடகம வரையான 126 கிலோமீற்றரின் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ஐ.அ.டொலர் 661.14 மில்லியனானதுடன் அதில் பின்னடுவ தொடக்கம் கொடகம வரையான அதிவேகப் பாதையின் 30.25 கிலோமீற்றர்களை நிர்மாணிப்பதற்கு சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியால் ஐ.அ.டொலர் 138.21 மில்லியன் அல்லது 20.9 சதவீதம் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. தென்பகுதி அதிவேகப் பாதையின் நிர்மாணத்திற்கான ஒட்டுமொத்த மூலங்களின் விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| **கடனளிக்கும் முகவர்** | **உடன்பட்ட தொகை** | **சதவீதம்** |
|---|---|---|
| | ஐ.அ.டொலர் மில்லியன் | % |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 186.00 | 28.13 |
| சர்வதேச ஒத்துழைப்பிற்கான ஜப்பான் வங்கி | 103.00 | 15.58 |
| நோர்டிக் அபிவிருத்தி நிதியம் | 5.40 | 0.82 |
| சுவீடிஷ் சர்வதேச அபிவிருத்திச் சங்கம் | 0.80 | 0.12 |
| சீன ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கி | 138.21 | 20.90 |
| இலங்கை அரசாங்கம் | 227.73 | 34.45 |
| **மொத்தம்** | **661.14** | **100.00** |

காலியில் கொட்டாவவிலிருந்து பின்னடுவ வரையான தெற்கு அதிவேகப் பாதை 2011 நவம்பர் 27 இல் பொது மக்களிற்காக திறந்துவிடப்பட்டிருந்ததுடன் மாத்தறையில் பின்னடுவவிலிருந்து கொடகம வரையான அதிவேகப் பாதையின் பிரிவு 2014 மார்ச் 16 இல் திறக்கப்பட்டது. நிர்மாண வேலைகளின் பூர்த்தியாக்கல் மீது வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தென்பகுதி நெடுஞ்சாலை மற்றும் 02 பாலங்களிற்கு நேரடியான அல்லது மறைமுகமான இணைப்பைக் கொண்டிருந்த 14 வீதிகளின் புனரமைப்பிற்காக அண்ணளவாக ரூபா 4.4 பில்லியன் கடன்களின் சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

1.3 **நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன்கள் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடன்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடன்களின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(எ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

| மூலங்கள் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | |
|---|---|---|---|---|---|
| | | | | 2015 ஆம் ஆண்டின் போது | 2015 திசெம்பர் 31 வரை |
| | ஐ.அ.டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| சீன எக்சிம் வங்கி | 138.21 | 15,895 | 4,313.00 | 4,307.00 | 14,925 |
| இலங்கை அரசாங்கம் | 24.39 | 2,805 | 118.50 | 118.40 | 3,359 |
| | **162.60** | **18,700** | **4,431.50** | **4,425.40** | **18,284** |

### 3.2 பௌதீக செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெறப்பட்ட தகவலின் பிரகாரம், பின்னடுவவிலிருந்து கொடகம வரையான அதிவேகப் பாதைப் பிரிவு நிர்மாணத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் மீது மேற்கொள்ளப்பட்ட சேமிப்புக்களைப் பயன்படுத்துவதற்காக தென் மாகாணத்தில் 06 ஏனைய தேசிய வீதிகள் மற்றும் 02 பாலங்களை புனரமைப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆரம்பத்தில் தீர்மானித்திருந்தது. ஆகையால், பின்னடுவவிலிருந்து கொடகம வரையான அதிவேகப் பாதைப் பிரிவு நிர்மாணத்திற்காக வேலையிலீடுபட்ட ஒப்பந்ததாரருடன் 2014 சனவரி 28 இல் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டு ரூபா 3,875.7 மில்லியன் கிரயத்தில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பிரதான ஒப்பந்தத்தின் முரண்களாக குறித்த மேலதிக வேலைகளை கருதுவதற்கும் ஒப்பந்த உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மாற்றம் செய்யாமல் அதே ஒப்பந்ததாரரிற்கே இதை வழங்குமாறும் கடன்வழங்கும் முகவர் அறிவுறுத்தியிருந்தார் என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் விளக்கமளித்திருந்தார். பெறப்பட்ட தகவலின் பிரகாரம், அத்தகைய தேசிய வீதிகள் மற்றும் பாலங்களின் புனரமைப்பு வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

(ஆ) மேலும், ஐ.அ.டொலரிற்கு எதிராக இலங்கை ரூபாவின் தேய்வு காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதிப் புனரமைப்பு வேலைகளின் கிரயத்தின் சேமிப்புக்களாக ரூபா 19.30 மில்லியன் தொகையும் காணப்பட்டதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது தென் மாகாணத்திலுள்ள 08 ஏனைய மாகாண வீதிகளை புனரமைப்பதற்கு அத்தகைய சேமிப்புக்களை பயன்படுத்துவதற்கு பின்னர் தீர்மானித்திருந்தது. அத்தகைய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 2016 யூன் 30 இல் உள்ளவாறு பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயன்முன்னேற்ற அறிக்கைகளின் பிரகாரம், தென் மாகாணத்திலுள்ள 06 தேசிய வீதிகளின் புனரமைப்பு வேலைகள் 01 மாதத்திலிருந்து 21 மாதங்கள் வரையான வீச்சிலான காலதாமதங்களுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணிசமானளவு பூர்த்திசெய்யப்பட்டிருந்தது. வீதிப் புனரமைப்பு வேலைகளின்

பூர்த்தியாக்கலிலுள்ள காலதாமதங்கள் மீது தாமதக் கட்டணங்களை அறவிடுவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையில் ஏற்பாடுகள் எதுவும் இல்லாதிருந்ததுடன் அவற்றின் மீதான கால நீடிப்புக்களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளர் விளக்கமளித்திருந்தார்.

(ஆ) காலி மாநகர சபையுடனான தகராறுகள் காரணமாக செயற்திட்டத்தால் களுவெல்ல – கரப்பிற்றிய – தலகஹ வீதியின் 02 கிலோமீற்றர்களின் புனரமைப்பு வேலைகள் குறைக்கப்பட்டிருந்தமை 2016 யூலையில் கணக்காய்வாளர்களால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக செவ்வைபார்த்தலில் வெளிப்பட்டிருந்தது. மேலும், வண்டுறபே – மபலகம வீதியின் 04+255 தொடக்கம் 04+275 கிலோமீற்றர் வரையான பிரிவின் ஆழமான சரிவில் அகற்றப்பட வேண்டியிருந்த தொலைபேசிக் கம்பங்கள் புனரமைப்பு வேலைகளின் பூர்த்தியாக்கலின் பின்னரும் கூட அகற்றப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. ஆகையால், அவற்றின் மீது பாதுகாப்பு அளவீடுகள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

(இ) கொடகம பாலத்தின் மேற்பக்கங்களின் விரிவான பிணைப்பு மூடியின் ஆணிகள் சரியாக பொருத்தப்பட்டிருக்காததுடன் அண்ணளவாக 06 அங்குல இடைவெளி காணப்பட்டது. மேலும், பல இடங்களில் பாலத்தின் மேற்பரப்பில் வெடிப்புக்கள் காணப்பட்டன.

(ஈ) உள்ளக மாதிரிகள் மற்றும் கொங்கிறீற் அடுக்குகள் மீதான தரப் பரீட்சிப்பு அறிக்கைகளின் பிரகாரம், வண்டுறபே – மபலஹம வீதி, யக்கலமுல்ல – இமடுவ வீதி மற்றும் களுவெல்ல – தலகஹ வீதி என்பவற்றின் வாகனப் பாதையின் மண் அடர்த்தி மற்றும் கொங்கிறீற் கட்டமைப்புக்கள் பல இடங்களில் நியமத் தேவைப்பாடுகளை அடைந்திருக்கவில்லை. ஒப்பந்ததாரர்களுக்கான கொடுப்பனவுகளிலிருந்து அவற்றின் மீது கழிப்பனவுகள் செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்குறிப்பிட்ட தவறுகள் காரணமாக வீதியின் நீடித்திருக்கும் நிலைமை பாதிக்கப்படலாம்

**3.4 பயன்பாடற்ற கொடுக்கல்வாங்கல்**

வீதிகளின் புனரமைப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் மீதான இழப்பீட்டை தீர்ப்பனவுசெய்வதிலுள்ள காலதாமதங்கள் காரணமாக செயற்திட்டத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5.23 மில்லியன் தொகையான வட்டி செலவிடப்பட்டிருந்தது.